## வெல்ல முடியாத சூழ்ச்சி?

ஒலிம்பிக்ஸில் மல்யுத்தப் போட்டிகளில், இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற முதல் இந்தியப் பெண் வீராங்கனை என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்த வினேஷ் போகத், 100 கிராம் எடை கூடுதலாக இருந்ததாகக் கூறி, தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். தங்கம் அல்லது வெள்ளிப் பதக்கம் உறுதியாக வெல்வார் என, இந்தியா முழுவதுமே எதிர்பார்த்திருந்த நிலையில், அவரது தகுதி நீக்கத்துக்குப் பின்னால் அரசியல் காரணங்கள் இருக்கலாம் என, விமர்சனங்கள் எழுந்துள்ளன.

அந்த அரசியல் காரணங்கள் என்பவை வெளிப்படையானவை. கடந்த ஜனவரி மாதம், இந்திய மல்யுத்தக் கூட்டமைப்பின் தலைவர் பிரிஜ் பூஷண் சிங் மீது பாலியல் புகார் எழுந்தது. ஒலிம்பிக்கில் வென்ற இந்திய வீராங்கனை சாக்ஷி மாலிக், பஜ்ரங் புனியா, வினேஷ் போகத் உள்ளிட்ட வீராங்கனைகள் வீதிகளில் இறங்கிப் போராடியதுடன், பிரிஜ் பூஷண் மீது வழக்குப் பதிவு செய்து, அவரைக் கைது செய்ய வேண்டும் என நீதிமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் நின்றனர்.

ஆனால், பிரிஜ் பூஷன் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று கூறி, அவரது மகன் கரண் பூஷன் சிங்கிற்கு தேர்தலில் வாய்ப்பு வழங்கி, மக்களவை உறுப்பினராகவும் வெற்றிபெற வைத்தது பாரதிய ஜனதா கட்சி.

மல்யுத்த வீராங்கனைகளின் போராட்டத்தின்போதே, அதில் தீவிரமாகப் பங்கெடுத்தவர் வினேஷ் போகத். அப்போது, அவர் தெருவிலேயே பயிற்சி எடுத்துக்கொண்ட புகைப்படங்களும் வெளியாகின. இப்போது, அவரது ஒலிம்பிக் வெற்றி என்பது பாலியல் குற்றச்சாட்டில் நடவடிக்கை எடுக்காத பா.ஜ.க. அரசினை விமர்சிக்கும் வெற்றியாக அமையும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஹரியானாவைச் சேர்ந்த வினேஷ் போகத்தின் குடும்பம், மற்றும் அவருடன் சேர்ந்த சகோதரிகள் ஆறு பேரும் மல்யுத்தப் போட்டிகளில் நாட்டுக்காக பல வெற்றிகளைக் கொண்டு வந்துள்ளனர். பெண்கள் மீதான சமூக அழுத்தங்கள், பாரம்பரியப் பழக்கங்களில், மூடத்தனங்களில் ஊறியிருந்த கிராமத்தினரையும் தாண்டி, சர்வதேச அரங்கங்களில் வெற்றி பெற்றார்கள். ஆனால், பாலியல் குற்றவாளிகளைக் காக்கும் அரசியல்வாதிகளின் சூழ்ச்சிகளை வெல்ல முடியவில்லை என, வெளிப்படையாகவே சமூக ஊடகங்களில் ஆவேசங்களைக் காணமுடிகிறது.

## ஃப்ளாஷ்பேக்





என்.மனோகரன்

### தேர்வு பெற்றதற்கு வாழ்த்து!

2004-ஆம் ஆண்டு குமரி மாவட்டம், ராஜாக்கமங்கலம் ஒருங்கிணைந்த ஒன்றியக் கழகப் பொருளாளராகவும், ராஜாக்கமங்கலம் பஞ்சாயத்துத் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இதையொட்டி, தளபதி அவர்களை நேரில் சந்தித்து, வாழ்த்துப் பெற சென்னை, அண்ணா அறிவாலயம் சென்றேன். வாழ்த்துத் தெரிவித்த தளபதி அவர்கள், கழகப் பணியாற்ற ஊக்கமளித்து அனுப்பினார். அத்தகைய இனிமையான தருணத்தில் எடுத்துக் கொண்ட படம்.

**– என்.மனோகரன்,**
**விவசாயத் தொழிலாளர் அணித் துணை அமைப்பாளர்,**
**கன்னியாகுமரி கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### தனக்குத் தானே தலைமை!

1948-ஆம் ஆண்டு செப்டம்பர் 15- ஆம் தேதி கலைஞரின் திருமண நாள். அன்று, இந்தி எதிர்ப்பு அடையாள மறியல் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார், தந்தை பெரியார். போராட்டத்தில் கலந்துகொண்டு, மணவிழாவுக்குத் தாமதமாகவே வந்தார் முத்தமிழறிஞர் கலைஞர். மணவிழா தலைமை ஏற்க வேண்டிய பேரறிஞர் அண்ணா அவர்களால் வரமுடியவில்லை. அதனால், மணமாலை மாற்றிக் கொண்டு, தன் திருமணத்துக்குத் தானே தலைமையுரையாற்றினார் கலைஞர்.

## சீரணி ⟹ இளைஞர் அணி 23

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...**

ஓவியம் : ரவி பேலட்



# சீரணிச் சேவையில் அரசு ஊழியர்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் ‘சீரணி’ அமைப்பைத் தொடங்கியபோது, அதன் நோக்கமாக இருந்தது இதுதான்: “பொதுப் பணிக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள இதயம் படைத்தவர்கள், தங்களுடைய காரியத்தைக் கவனித்தது போக மீதமுள்ள நேரத்தைச் சமுதாயத்தை மேம்படுத்தவும், பொதுப் பணிக்கும் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கும் பயன்படுத்த வேண்டும்.”

சீரணி மூலம் பல அற்புதமான பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு வருவதைக் கண்டு, தமிழ்நாடு அரசின் ஊழியர்கள் பலர், சீரணியில் சேர விரும்பினார்கள். ஊர்க் காவல் படையைப் போல, சீரணியிலும் அரசு ஊழியர்கள் சேர அனுமதி அளிப்பது குறித்து, முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசு பரிசீலித்தது. சீரணியில் சேர அனுமதியும் அளித்தது.

அப்போது அது தொடர்பாக, 1970-ஆம் ஆண்டு ஜனவரி 6-ஆம் தேதியிட்ட அரசாணை ஒன்று வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில் சீரணியில் சேர விரும்பும் அரசு ஊழியர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகளாக கீழ்க் கண்டவை பட்டியலிடப் பட்டிருந்தன:

1) உடல் வலுப்பெற்ற எல்லா அரசு ஊழியர் களுக்கும் (ஆண், பெண் இருபாலரும்) சீரணியில் சேரத் தகுதி உண்டு.

2) வயது 45-க்கு மேல் இருக்கக் கூடாது.

3) நல்ல குணநலனும், உடல் வலுவும் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

4) சமூகப் பணிபுரியும் ஆர்வமும் ஆற்றலும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

சென்னை நகரில் பணிபுரிந்து வந்த அரசு ஊழியர்கள், சீரணியில் சேர விரும்பினால், சீரணி தனி அதிகாரிக்கு எழுதும்படியும், இதர மாவட்டங்களில் உள்ள ஊழியர்கள், தாங்கள் எந்த அதிகாரியின் கீழ் பணிபுரிகிறார்களோ அவர்கள் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மனு செய்ய வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருந்தது.

ஊர்க்காவல் படையில் இருந்தவர்களுக்கு, அவசரமான நேரங்களில் மட்டும் அழைப்பு வரும். அவர்கள் வந்து பணிபுரிந்துவிட்டுச் செல்வார்கள். ஆனால், சீரணியில் அப்படி இல்லை. தொடர்ந்து பணி இருந்துகொண்டே இருக்கும். எனவே, அரசு அலுவலர்கள் சீரணியில் சேர்வதால் தங்களின் அன்றாட அரசு அலுவல்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

**அரசு அலுவலர்கள் சீரணியில் சேர்வதால் தங்களின் அன்றாட அரசு அலுவல்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்!**

இந்த விதிகளின் அடிப்படையில் சீரணியில் சேர்கின்ற அரசு ஊழியர்களுக்கு இருக்க வேண்டிய குறிக்கோள்களாகக் கீழ்க்கண்டவை சொல்லப்பட்டிருந்தன:

1) சமுதாய உணர்வினையும் தன்னலமற்ற சேவை உணர்வினையும் வளர்த்தல்.

2) ஊர்களில் தலைமை உணர்வினை வளர்த்தல்.

3) ஊராட்சிகள், கூட்டுறவுகள் போன்ற கிராம நிறுவனங்களில் இணைப்பான முறையில் பணிபுரிகின்ற ஆர்வத்தைத் தூண்டுதல்.

4) கிராமிய வளர்ச்சிக்கு முக்கிய அடித்தளமாக, கிராமமே அமைய உதவி செய்தல்.

5) கிராம ஆதாரங்களை வளர்த்தல்; ஒன்று சேர்த்தல்.

6) தனிப்பட்ட வாழ்விலும், பொது வாழ்விலும் துப்புரவைக் கடைப்பிடித்தல்.

7) ஊர்ப்புற ஆள் (மனித) வளத்தினைப் பயன்படுத்துதல்.

8) ஊர்ப்புற நபர் வருமானத்தைப் பெருக்குதல்; தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிப் பணியில் ஊர்ப்புற மக்களை ஈடுபடுத்துதல்.

9) தன்னலத்தை உதறிவிட்டுப் பொதுநலம் பேணுகின்ற உணர்வினை வளர்த்தல்.

10) அரசு மானியங்களையே ஊர்ச் சமுதாயம் நம்பியிராமல், ஊர்ப்புற ஆதாரங்களையும், ஊர்ப்புறச் சக்திகளையும் திறமைகளையும் பயன்படுத்தி, ஊர்ப்புறத் தேவைகளை நிறைவு செய்தல்.


இப்படியாக, சீரணியை வளர்த்தெடுப்பதில் அரசு ஊழியர்களும் கைகொடுத்தார்கள்..!

...வெற்றிநடை போடும்.

## பொய்ப்பெட்டி 23

**கோவி.லெனின்**

“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...”



# கதறவிடும் கலைஞர்!

***கலைஞருக்கு ஏன் இன்னமும் இத்தனை எதிரிகள்?***

கவுன்சிலர் சீட்டுகூட ஜெயிக்க முடியாத கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்கள் மேடைகளில் கலைஞரை விமர்சிக்கிறார்கள். கலைஞரின் புகழ் போற்றும் பாடல்களைத் திரித்துப் பாடுகிறார்கள். கலைஞர் பெயரில் நூலகம், மருத்துவமனை ஆகியவை திறக்கப்படும்போது ‘வேறு பெயர் இல்லையா?’ என்று கேட்கிறார்கள். தமிழ்நாட்டில் வேறு வேறு ஆளுமைகளின் பெயர்களில் நிறைய அடையாளங்கள் இருக்கின்றன. கட்டடங்கள் இருக்கின்றன. கலைஞர் பெயரை வைத்தால் மட்டும் இவர்கள் கொந்தளிப்பது ஏன்? கலைஞர் மறைந்து 6 ஆண்டுகள் ஆன பிறகும், அவரை விமர்சிப்பது ஏன்? அவரை எதிரியாகக் கருதுவது ஏன்?

ஏனென்றால், கலைஞர் காலம் காலமாக சமுதாயத்தில் கட்டமைக்கப்பட்டிருந்த ஏற்றத்தாழ்வுகளைத் தன் சிந்தனையாலும் செயல்களாலும் தகர்த்தெறிந்தவர். இந்திய அரசியலில், தேர்தல் களங்களில் வெற்றி பெறுவதற்கு, சாதியைப் பயன்படுத்துவது பலரது வழக்கம். கலைஞருக்குச் சாதிப் பெருமையோ, சாதி எண்ணிக்கையின் அடிப்படையில் செல்வாக்கோ கிடையாது. தான் பிறந்த மதத்தில் இருந்த மூடநம்பிக்கைகளையும் அடிமைத்தனங்களையும் எதிர்த்துக் குரல் கொடுத்த கலகக்காரர் அவர். அதனாலேயே அவரை ‘இந்து மத விரோதி’ என்று முத்திரை குத்தப் பார்த்தார்கள். ஆனாலும், பெரும்பான்மையான இந்துக்களின் ஆதரவும் சேர்ந்துதான் அவர் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று செயல்பட்டு இந்தியாவுக்கே முன்னோடியான திட்டங்களை வழங்கினார். அனைத்து சமுதாயங்களின் உயர்வுக்கான இட ஒதுக்கீட்டினை வழங்கி, சமூக நீதியை நிலைநாட்டியவர் கலைஞர்.

**கலைஞர் மறைந்து 6 ஆண்டுகள் ஆன நிலையில் மட்டுமல்ல, 100 ஆண்டுகள் ஆனாலும், இவர்கள் கலைஞரை எதிரியாக நினைத்துக் கதறிக் கொண்டேதான் இருப்பார்கள்.**

இந்து திருக்கோயில்களில் குடமுழுக்கு நடத்தியும், தேரோட்டம் நடத்தியும் பல திருப்பணிகள் செய்தவர். கோவில் கருவறையில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆவதற்கான சட்டத்தை இயற்றி, ‘ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம்’ என்பதை நிரூபித்துக் காட்டியவர்.

பெரிய குடும்பப் பின்னணியோ பணபலமோ இல்லாமல், மிகப் பெரிய அரசியல் கட்சியான காங்கிரஸ் கட்சியை எதிர்த்து முதல் தேர்தல் களத்தில் பெரும் வெற்றி பெற்றவர் கலைஞர். 1957-இல் தொடங்கி 2016-ஆம் ஆண்டு வரை தான் போட்டியிட்ட 13 தேர்தல்களிலும் தோல்வியே காணாமல் வெற்றிபெற்ற ஒரே அரசியல் தலைவர் கலைஞர் மட்டுமே. மதம், சாதி, குலப் பெருமை, பாரம்பரியம் இவற்றை வைத்து, அரசியல் செய்தவர்களுக்கு நடுவில் கொள்கையை முன்னிறுத்தி, மேடைதோறும் அதனை முழங்கி, நாள்தோறும் அதை எழுதி மக்களிடம் கொண்டு சேர்த்து அவர்களின் பேராதரவுடன் வெற்றி பெற்றவர் கலைஞர்.

மனித உரிமைகளின் பாதுகாவலரான கலைஞரை மனிதகுல எதிரிகள் எப்படி ஏற்றுக் கொள்வார்கள்? அதனால்தான் கலைஞரை விமர்சிக்கிறார்கள். ஆனால், கலைஞர் கொண்டு வந்த திட்டங்களின் பயன்களை அவர்களும் சேர்த்தே அனுபவிக்கிறார்கள். கலைஞர் மறைந்து 6 ஆண்டுகள் ஆன நிலையில் மட்டுமல்ல, 100 ஆண்டுகள் ஆனாலும், இவர்கள் கலைஞரை எதிரியாக நினைத்துக் கதறிக் கொண்டேதான் இருப்பார்கள். கலைஞர் எப்போதும் வரலாற்றில் உயர்ந்து நிற்பார்.

...வினா தொடரும்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

564

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.